‘திறமை ஒரு வகுப்பின் சொத்தல்ல’

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The “Nam Nadu”: A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா — இலங்கையில் 10 சதம் | சென்னை: ஆடி மீ 2உ சனி (17—7—54) — வெளியூர்: ஆடி மீ 3உ ஞாயிறு (18—7—54) | மலர்: 2 — இதழ்: 29

அண்ணா காட்டிய வழியில் ம.பொ.சி.?

‘எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என நேரு உறுதி’

‘இருளில் தவித்த நமக்கு அது ஒரு விளக்கு’

‘பிரகாசம் ஒப்ப மறுத்தால் மத்ய சர்க்கார் தலையிட்டு தீர்க்க வேண்டும்’

[ஜோலார்பேட்டையில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, சித்தூர் தமிழ்ப்பகுதி பிரச்னை குறித்து மிக மிகத் தெளிவான விளக்கங் கொடுத்துள்ளார். அதில் அவர், பிரச்னையை உண்டாக்கியது டெல்லி ஆதிபத்தியம் எனவும், பரிகாரம் தேடவேண்டிய அதிகாரமும் கடமையும் கொண்டிருப்பதும் அதே டெல்லிதான் என்றும் அறிவித்துள்ளார். அதற்காக டில்லி ஒரு எல்லைக் கமிஷனை நியமிக்க வேண்டுமெனவும், அதன் முடிவு நிறைவேற்றப்படாத நிலையில்தான், அறப்போர் தொடுக்கவேண்டிய அவசியம் பிறக்கிறது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். அதே கருத்தை, 15—7—54ல் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ம. பொ. சி. வெளியிட்டிருக்கபோதிலும், பொதுச் செயலாளரையும் தி. மு. கழகத்தையும் தம் இயல்புப்படி அர்ச்சித்திருக்கிறார். தி. மு. கழகக் கருத்தை அப்படியே ஒப்புக் கொண்ட மாபெரும் தலைவர், தமக்கு ஒத்தக் கருத்தைக் கூறியவர்களை நிந்திப்பது என்றால், அது எவருக்கும் புரியாத வியப்பைத் தரும் வெறும் புதிராகத்தான் இருக்கிறது! என்ன செய்வது? தொட்டில் பழக்கத்தை இடையில் மாற்றுவது இலகுவில் முடியக் கூடியதா?]

“சித்தூர் போராட்டம் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நேருவின் கடிதம் இருளில் தவித்த நமக்கு ஒரு விளக்கு மாதிரி எல்லைக் கமிஷன் நியமிக்கப்படும் என்று உறுதி கூறி நேரு பதில் எழுதியிருக்கிறார்.”

“தமிழரசு கழகம் சிறிய ஸ்தாபனம். ஆனால் அதன் கொள்கை உலகம் ஒப்புக்கொள்ளும் கொள்கை. என்னை ஏசுகிற அண்ணாதுரைகூட எங்கள் கொள்கையை நீக்கவில்லை.”

“நேருவே கடிதம் எழுதிய பிறகு நமக்குள் சச்சரவு வேண்டாம். ஆகவே எல்லைக் கமிஷன் நிறுவுவதை துரிதப்படுத்துவது தமிழ் நாடு காங்கிரசின் கடமை. எல்லைக் கமிஷன் நிறுவ இரு ராஜ்ய முதன் மந்திரிகளும் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதாக நேரு கூறுகிறார். எந்த அடிப்படையில் பிரச்னையை முடிவு செய்வது என்பதுதான் பிரச்னை. வேங்கடம் வரை தமிழகம் என்ற நிலையை தளர்த்தக்கூடாது. பிரகாசம் ஒப்புக்கொள்ளாவிட்டால் மத்ய சர்க்கார் தலையிட்டு தீர்க்க வேண்டும்.”

‘வாய்ப்பளித்ததால் அக்கூற்று பொய்யாயிற்று’

காலஞ்சென்ற டாக்டர் நாயர், சர் தியாகராயர், தணிகாசலனார் சேவையின் வெற்றி!

ஆற்காடு இராமசாமியின் ஆணித்தரமான பேச்சு

“தகுந்த வாய்ப்பும், பயிற்சியும் தரப்படுமானால், அறிவுக் குறைவு எந்த ஒரு வகுப்பிலும் இருக்காது.”

“வகுப்புகள் அனைத்திலும் ஒரே வகையான அறிவுப் பண்புதான் இருக்கிறது என்பதை, என்னுடைய ஐம்பது ஆண்டுக் கல்வித் துறை அனுபவத்திலிருந்து கூறுகிறேன்.”

“குறிப்பிட்ட ஒரு வகுப்புக்குப் புறம்பான மற்றொரு வகுப்பின் அறிவுப் பண்பை உருவாக்குவதற்கு, வரலாற்று காரணங்களால், மேலும் நீண்ட காலம் தேவைப்பட்டது.”

“பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து கல்வி பெற்று வருகிற பெற்றோர்கள், தங்கள் சிறுவர்கள், பள்ளியில் பெறும் கல்விப் பயிற்சியை, வீட்டிலும் பெற உதவுகின்றனர். பிற்பட்டவர் எனக் கூறப்படும் சிறுவர்களுக்கு இவ்வாய்ப்பு அறவே கிடையாது. அவர்களுடைய கல்விப் பயிற்சி தினசரி பள்ளி கூடத்தோடு முடிந்து விடுகிறது.”

“ஓராண்டு இரண்டாண்டு காலத்திற்குள்ளாக அல்ல, தொடர்ந்து பல ஆண்டுகாலம், வாய்ப்பளிக்கப்படுமானால், குறிப்பிட்ட வகுப்பு தோற்றுவிக்கின்ற பேரறிஞர்களைப் போன்றே, ஒவ்வொரு வகுப்பும் தோற்றுவிக்கும் என்ற படிப்பினையைத்தான், மேற்குறிப்பிட்ட உண்மை உறுதி செய்கிறது.”

இக்கருத்துக்களை, ஆற்காடு டாக்டர் இராமசாமி அவர்கள், வட சென்னை சர். தியாகராயக் கல்லூரி விஞ்ஞானப் பகுதியைத் துவக்கிவைத்த பொழுது கூறினார். அவர் மேலும் பேசும்பொழுது:—

கல்லூரிகளில் அறிவாற்றல் மிக்கவர்கள் எனக் கருதப்பட்ட 80 சத விகிதத்தினர், வாழ்க்கையில் வெற்றி கண்டுள்ளார்கள் என்பது அறவே கிடையாது. நாட்டின் அறிவு பெருக்கத் துறைகளில் அவர்களை மருந்துக்கும் காண முடியவில்லை. கல்லூரிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர்தான், உண்மையான கல்வி தொடங்குகிறது.

சமூகத்தின் அடிதளத்தில் கிடந்தவர்களென பிற்பட்டோர் எனச் சொல்லப்பட்டு வந்தவர்கள், கடந்த 35 ஆண்டுக்குள் உச்சிக்கு உயர்ந்திருக்கிறார்கள் என்ற உண்மையை, பொறியியல் கல்லூரிகளிலும் மற்றத் தொழிற் கல்லூரிகளிலும் பெறப்படுகிற முடிவுகள், விளக்கமாக எடுத்துக்காட்டுகின்றன. மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், பிணங்களை அறுத்துப் பரீட்சிக்கும் பாடப்பயிற்சி கட்டாயமாக இருந்த காரணத்தால், அக்கல்லூரி துவக்கப்பட்ட காலத்தில் அதில் சேருவதற்குக் குறிப்பிட்ட வகுப்பினர் முன்வரவில்லை.

பிற்பட்ட வகுப்பினர் என அழைக்கப்படுபவர்கள் கல்லூரிப் படிப்பைப் பெற முன்வருவதற்கான, ஒரு சூழ்நிலையை உண்டாக்குவதில், பங்கு பொருந்திய கைக்கொண்டு போராடியவர்கள் காலஞ்சென்ற டாக்டர் டி. எம். நாயர், சர். பி. தியாகராயர், ஓ. டி. தணிகாசலம் செட்டி ஆகிய பெருந்தலைவர்கள்தான் என்பதை, தற்கால மாணவர்கள் தம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் உரேனியத் தொழிற்சாலை

ஆஸ்திரேலியாவின் முதல் யுரேனியத் தொழிற்சாலையை, ஆஸ்திரேலியப் பிரதமர் செப்டம்பர் திங்களில் திறந்து வைப்பார். இத்தொழிற்சாலை, யுரேனியம் ஆக்சைட் தயார் செய்து பிரிட்டனுக்கு விற்பனை செய்யும்.

தி.கோ.தமிழர் பிரச்சினை?

அறப்போராட்டத்திற்கு மா. பொ. சி. எதிர்ப்பு!

‘தடை மீறுவதால் தீராது’

‘தாணுப் பிள்ளைக்கு நேரு கட்டளை இட வேண்டும்’

1—7—54-ல் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ம. பொ. சி. கூறியது

“இப்போது அங்கு ஏற்பட்டுள்ள சிக்கலை எப்படி தீர்ப்பது என்பது தான் பிரச்சினை. ஜதாக்களை அனுப்பி தடை மீறுவதால் தீராது. 9 தமிழ் தாலுகாக்களை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதே. திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் குறைந்தபட்ச கோரிக்கை இது.

பண்டித நேருவின் பொறுப்பு த. நா. கா. க. தலைவர் திரு. காமராஜரின் பொறுப்பும் தான். ஒரு மலையாள காங்கிரசிற்கு தனி காங்கிரஸ், ஒரு தென் கன்னட ஜில்லாவிற்கு தனி காங்கிரஸ், திருவாங்கூர் தமிழ் தாலுக்காக்களுக்கு மட்டும் ஏன் தனி ஸ்தாபனம் அமைக்கக் கூடாது? கன்னடத்துக்கு ஒரு நீதி தனித் தமிழுக்கு மற்றொரு நீதியா? இது சாத்தியமில்லையானால் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியுடன் இணைத்து விடலாம்; இப்பொறுப்பை தட்டிக்கழிக்க வேண்டாம். இந்த குறைந்தபட்ச கோரிக்கையை ஏற்றால் சத்தியாக்கிரகம் நின்றுவிடும். நியாயமாக நடந்துக் கொள்ளுமாறு பட்டம் தாணுபிள்ளைக்கு நேருஜி ஆணையிட வேண்டும்.”

‘நினைத்திருந்தால் மாநாடு நடைபெற விடாமல் தடுத்திருப்பேன்!’

‘பேசிவிட்டுப்போகட்டுமென அனுமதித்துவிட்டேன்!’

விநாயகத்தின் பெருந்தன்மையே தன்மை!

“ஜோலார்பேட்டையில் நடந்த ஒரு மாநாட்டில் தமிழரசு கழகத் தலைவரையும் என்னையும் தி. மு. கழக தலைவர் கண்டபடி தாக்கிப் பேசினார். நான் விரும்பியிருந்தால் அக்கூட்டத்தை தடுத்திருக்க முடியும், ஆனால் தி. மு. க. கொள்கையைத் தெரிந்துகொள்ள விரும்பியே அனுமதித்தேன். போராட்டத்திற்கு ஆக்க யோசனைகள் கூறாமல் நாடகம் நடத்தி ஏழைகளை சுரண்டுகின்றனர்.”

—இவ்வாறு 15—7—54 மாலை கோகலே மண்டபத்தில் தோழர் கா. மு. ஷெரீப் தலைமையில் நடந்த தமிழரசுக் கழகக் கூட்டத்தில் தோழர் விநாயகம் பேசுகையில் கூறினார்.

அறிக்கை

இந்திய சர்க்காரின் வரிவிதிப்பு விசாரணைக் குழு, தனது அறிக்கையை செப்டம்பர் திங்களில் சர்க்காரிடம் தரும் என்று தெரிகிறது.

இந்தோ-சீனாவில் ஹனோய்க்கு 70 மைல் தூரத்தில் உள்ள சருலின் என்ற இடத்தை பிரெஞ்சுத் துருப்புகள் காலி செய்துவிட்டு வெளியேறினர் என்று தெரிகிறது.

நம் நாடு

சென்னை 17—7—54 சனி

பூஜா மனோபாவம்!

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதருக்கு வெள்ளியில் இரதம்; தங்கத்தில் இருஷபவாகனம்; பிள்ளையாருக்கு வெள்ளி மூஷிக வாகனம்!

திருவேங்கடத்தானுக்கு விலையுயர்ந்த வைரத்தால் முடி; [illegible] கல்லிழைத்த கனகக் கையுறை!

பொன்னும், வெள்ளியும் இப்படி வீணாக்கப்பட வேண்டுமா? பூமிக்கடியில் மறைந்திருக்கும் பொன்னை வெட்டி எடுக்கும்பொழுது, மாண்ட பாட்டாளிகளின் பின் சந்ததியினருக்கு, அதன் பலன் இருக்கக் கூடாதா? எனக் கேட்டால், கோபிக்கின்றனர்; நாத்திகர் என நம்மை நாக்கூசாமல் பிதற்றுகின்றனர்; பக்தி முற்றிய போனதாக பாவனை செய்து கொண்டிருக்கின்ற பூஜாமனோபாவத்தில் நம்மைத் தூற்றுகின்றனர்!

அவர்களைக் கண்டு நாம் சீறுதல் கூடாது; மாறாக அவர்கள் அறியாமை கண்டும், அடிமை குணம் கண்டும், கவல்பட்டுக் கூறி, அதைக் களைவதில் நாம் தீவிரம் காட்ட வேண்டும்.

கற்சிலையில் ஒன்றிய நமது மக்களின் பூஜா மனோபாவம், கடைசியில் மடாதிபதிகளிடத்தும் சென்றடைந்தது.

அவருக்கு மின்னும் பொன்னும் வெள்ளியும் பூணக் கொடுத்து, வறுமையை விருப்புடன் பூண்டுகொண்டும், அவர் ஏறி உலாவ பட்டுச் சிவிகை தந்து அதை மகிழ்வுடன் தூக்கித் திரிய தம்மை ஆளாக்கிக்கொண்டும், அவரை மாமிச மலையாக வளர்த்து, தம்மை எலும்புக் கூடாக்கிக் கொண்டும், அவரை போக போக்கியத்திலே புரளவிட்டு, தம்மைக் காய்ந்த வயிறுடன் வைத்துக் கொண்டும், நம் மக்கள், இன்னும் கருத்திழந்து காலம் கழித்து வருவதற்கு, அந்த பூஜா மனோபாவந்தான் காரணம்!

நம்போன்ற மனிதனைத் தூக்கித் திரிவதா? காலைக் கழுவி நீர் குடிப்பதா? அவன் காலடிகளில் வீழ்ந்து பணிந்து, அவனைக் கண்களில் ஒத்திக் கொள்வதா? இவ்வாறு கேட்டால்; தவறெனக் கூறத் தாம் நம்மை ஏசுகின்றனர்! [illegible] நாம் மறந்தொழியக் கூடாது என தூற்றுகின்றனர்!

அவர்களும் பூஜா மனோபாவம் கொண்ட கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான்! அவர் தம் நிலைகண்டு இரங்குவோம்; இதமாக அறிவுரை கூறி அவர்களை நம் பக்கம் சேர்ப்போம்!

அந்த பூஜா மனோபாவம், அரசியல் துறையில் செய்து விட்ட அனர்த்தங்களோ கோடி கோடி என்னலாம். அரசியல் துறையில் அதனால் ஏற்பட்ட விளைவு, அதனிலும் கொடியதாகும் என்பதோடு, மிக மிகப் பயங்கரமானதுமாகும்!

பூஜா மனோபாவம், நமது மக்களின் பரம்பரை சொத்து! கொடிய தொத்து நோய்!

அந்த பூஜா மனோபாவத்தின் பலனாகத்தான், காங்கிரஸ் கட்சி வளர்ந்தது; இப்பொழுதும் வளர்ந்து வருகிறது. காங்கிரஸ் சிறந்ததோர் அரசியல் ஸ்தாபனமாக இருந்திருக்குமானால், அது வெறும் அரசியல் கருத்துக்களை மட்டும் கூறி, நாட்டு மக்களின் நல்லாதரவைப் பெற்றிருக்கவேண்டும். ஆனால் காங்கிரசோ, ஒரு மத அரசியல் ஸ்தாபனமாகவே, அதன் துவக்கக் கால முதல் இருந்து விட்டதினால், இந்தக் காலத்திலும், அறிவியல் கண்ணோட்டத்தைப் பெற முடியவில்லை. முயற்சியினால் முடியாதது ஒன்றுமில்லை. ஆனால், அம்முயற்சியை மேற்கொள்ள அதற்கும் பூரணமான எண்ணமில்லை!

மக்களின் அறிவைப் பெருக்கி, அவர்களிடம் தொத்து நோயாகப் பரவிக் கிடக்கிற பூஜா மனோபாவத்தை விரட்ட, காங்கிரஸ் கட்சி தவறிவிட்டது. இப்பொழுதும், அத்துறையில் கருத்து செலுத்த பயப்படுகிறது. எனவே, அதன் விளைவை காங்கிரஸ் கட்சி அநுபவித்துத்தான் ஆக வேண்டும்.

அறிவியல் போதனை அளிப்பதற்கு மாறாக, காங்கிரஸ், அதை வளர விடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறது. வெளிப்படையாக மக்களின் பூஜா மனோபாவத்தை வளர்க்கும் அநீதியையும் வேண்டுமென்றே செய்தும் வந்திருக்கிறது. எனவே அதன் பலனை, இப்பொழுது காங்கிரஸ் அனுபவிப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை!

காங்கிரஸ் தலைவர்களுக்கெல்லாம் சிறப்புடையவராக உள்ள பண்டிதர் பிரஸ்பூரின் பொதுக்கூட்டமொன்றில் பேசும்பொழுது, அவருக்கு பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்ட அரியாசனம் ஒன்றை அமைவதற்காக கூட்டத்திற்குக் கொண்டு வந்தனராம். அதைக் கண்டதும், அவர் கோபித்துக் கொண்டிருக்கிறார்! 'தூக்கிச் செல்லுங்கள்' எனக் கடிந்துக் கூறியிருக்கிறார்!

அவர் உள்ளத்தை எவரும் சந்தேகிக்க மாட்டார்கள் ஆனால், அத்தகைய மனோபாவம் மக்களிடம் இன்றும் மாறாமல் இருந்து வருதற்கு, அனைவரும் பொறுப்பேற்க வேண்டியவர்தான் என்றக் குற்றச்சாட்டிற்கு, அவர் உள்ளாகாமல் இருக்க ஒருக்காலும் முடியாது!

தேர்தல் காலங்களில் காங்கிரஸ் கட்சியினர் உத்தமர் காந்தி பெயர் கூறுவதும், ஆரிய இராமன் பெயர் சொல்வதும், அனுமான் பெயர் உச்சரிப்பதும், மக்களுக்குள்ள பூஜா மனோபாவத்தைத் தங்கள் கட்சிக்குச் சாதகமாக்கிக் கொள்வதற்கேயல்லாமல், வேறு எதற்கு? அரசியல் துறையில், அது கூடாது என தம் கட்சியினருக்குக் கண்டிப்பான கட்டளை பிறப்பித்திருக்க வேண்டும், அந்தப் பண்டிதர்!

மக்களின் உரிமைக்கும், முன்னேற்றத்திற்கும், அறியாமை மிக்கவர்களாலும் பூஜா மனோபாவம் கொண்டவர்களாலும் ஏற்பட்டுள்ள கேடு, கயவர்களால் விளைந்த கேட்டைக் காட்டிலும் குறைவானதேயாகும் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது,

செம்புப் பாத்திரத்தை எவ்வளவு செம்பொன் போல் [illegible] துலக்கினாலும், மீண்டும் மீண்டும் களிம்பு ஏற்படுவது போல், அறிவியல் போதனை மேலும் மேலும் போதிக்கப்பட்டாலும், மக்களுக்குள்ள பூஜா மனோபாவம் மறைந்து மறைந்து தோற்றமளிக்கும் போலும்! எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! இடைவிடாது அறிவியல் போதனை அளிக்கப்பட்டு வந்தால்தான், பூஜா மனோபாவமெனும் கொடிய தொத்து நோயிலிருந்து, நம் மக்களை, நாம் காப்பாற்றினவர்களாவோம்!

பூஜா மனோபாவத்தால், பொருளும் நட்டமாகும்; தொழில் முன்னேற்றமும் தடைப்படும்; உரிமைக்கும் ஊறு உண்டாகும்; உலக மக்களுடன் நாமும் ஒன்றி வாழ்வதும் ஒத்திப் போடப்பட்டுவிடும்!

அரசனுக்கும், மக்கள் அவைக்கும் பிணக்கு அன்று

மக்கள் அவைக்கும், நிர்வாக அமைப்புக்கும் சிக்கல் இன்று

துறைகள் அனைத்திலும் மக்களாட்சி மனப்பாங்கு தோன்ற வேண்டும்

மக்களாட்சி முறை பற்றி மாவலங்கர்

"ஒத்துப் போகும் உணர்வும் பொறுத்துக் கொள்ளும் பண்பும் தான் பாராளுமன்ற மக்களாட்சி முறையின் சாரமாகும்."

"மக்களாட்சி முறை வெற்றிகரமாக நடைபெற, பாராளு மன்ற உறுப்பினர்கள் மக்களாட்சி மனப்பாங்கு பெற முயலவேண்டும். அதாவது, மற்றவர் கருத்தறியும் ஆற்றலை வளர்ப்பதும் அத்துடன் அக்கருத்தைப் பொறுத்துக் கொள்ளும் தன்மை பெறுவதும்தான் மக்களாட்சி மனப்பாங்கு எனப்படும்."

"குடும்பத்தையும், சமுதாயத்தையும் மக்களாட்சி மனப்பாங்கால் ஆளப்பட்டாலல்லாது, அரசியல் துறையையும் பாராளுமன்றத் துறையையும், அம்மனப்பாங்கால் அணுகுவது என்பது கடினமானதாகும்,"

இக்கருத்துக்களை இந்தியாவில் பாராளுமன்ற வாழ்க்கை என்றத் தலைப்பில் பம்பாய் நகரில் பேசிய இந்திய மக்கள் சபைத் தலைவர் மாவலங்கர் குறிப்பிட்டார். மேலும் அவர்தம் பேச்சில் குறிப்பிட்டதாவது:—

பாதுகாப்புப் பணி புரிவது ஒன்றுதான், ஒரு அரசாங்கத்தின் கடமையாக, சென்ற ஐம்பது ஆண்டுகள் வரை இருந்து வந்திருக்கிறது. அந்நிலை சிறுகச் சிறுகக் காலப்போக்கில் மாறி வந்து, மக்களின் நலம் பேணுவது ஒரு அரசாங்கத்தின் கடமை என்ற முடிவில் வந்து நிற்கிறது.

ஆங்கிலேயரிடமிருந்து நாம் பாராளு மன்ற மக்களாட்சி ஏற்பாட்டைப் பெற்றிருக்கிறோம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக தங்களுக்குகந்த வகையில், பரீட்சித்தும், அனுபவித்தும் அம்முறையை ஆங்கிலேயர்கள் உருவாக்கியுள்ளனர்.

மக்கள் விருப்பப்படி இயங்க வேண்டியது ஒரு அரசாங்கத்தின் கடமையாகும். இதுதான் பிரிட்டிஷ் பாராளு மன்ற மக்களாட்சி ஏற்பாடாகும்.

பாராளு மன்றம் செயல்படுவதைக் கூர்ந்து நோக்கப்படுமானால், ஒரு சாதாரண மனிதன் மிக மிகக் குறைந்த அளவே, அதில் பங்கு பெற்றிருக்கிறான் என்பது விளக்கமாகும். அவனுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் தான் பெற்றுள்ள வாக்குரிமையின் பொருளை அவன் புரிந்து கொண்டிருக்கிறான் என்பதையும், நல்ல முறையில் அவ்வுரிமையைப் பயன்படுத்துகிறான் என்பதையும், ஒருவராலும் கூற முடியாது.

பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு கட்சி, உண்மையில் ஒரு நாட்டின் கருத்தைப் பிரதிபலிக்கிறது என்றும் சொல்வதற்கில்லை. ஒரு தொகுதியில் ஒரு இடத்திற்காக, ஆறு நபர்கள் தேர்தலில் போட்டியிட்டால், அதில் வெற்றி பெற்ற அபேட்சகர், அத்தொகுதி மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் பாதி வாக்குகளைக்கூட பெற்றவராக இருப்பது கிடையாது. அந்நிலையில் மக்கள் அனைவரின் ஆதரவையும் அவர் பெற்றிருப்பதாகக் கொள்ள முடியுமா? தேர்தல் விதிப்படி, அவருக்கு எதிராக வாக்களித்தவர்களையும் சேர்த்து, அத்தொகுதியில் உள்ள அனைத்து மக்களின் பிரதிநிதியாக அவர் கருதப்படுகிறார். ஆனால், உண்மையில், அவர் சிறுபான்மையோர் பிரதிநிதியாகவே அவர் இருக்கிறார்

முற்காலத்தில் அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் இருந்து வந்த பிணக்கு மாற்றமுற்று, நிர்வாகத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் பிணக்குண்டாகும் நிலையில் முடிந்திருக்கிறது. நிர்வாகம் என நான் குறிப்பிட்டது அமைச்சர் குழுவை அல்ல அதுவும், போகும்; என்றென்றும் நிலைத்து இயங்கிவரும் நிர்வாக இயந்திரத்தையே குறிப்பிட்டேன்

"இப்பொழுதுள்ள அரசாங்கத்தை மக்களாட்சி அரசாங்கமாகக் கொள்வது சரியல்ல. இது ஒரு பற்றற்ற எதேச்சாதிகார ஆட்சியேயாகும்."

"மக்கள் சபையில் உண்மையான எதிர்க்கட்சி எதுவும் கிடையாது. எதிர்க்கட்சி எனக் கூறப்படுவன அனைத்தும், நாட்டில் காணப்படும் அரசியல் நிலையை எதிரொலிப்பதேயாகும்."

போலீசார் அழைத்து சென்ற 12 தொண்டர்களைக் காணோம்!

— (:) —

புதுவையில் மக்களிடையே பரபரப்பு

புதுச்சேரி, ஜூலை 15—

பிரெஞ்சிந்திய சர்க்கார் மாளிகை முன் நேற்று நடைபெற்ற போலீஸ் தடியடி தர்பாரின்போது பிரெஞ்சிந்தியப் போலீசாரால் நன்றாக தாக்கப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்ட 16 இணைப்புக் கிளர்ச்சி தொண்டர்களில் 12 பேரின் கதி என்னவாயிற்று என்று தெரியவில்லை.

இரவு முழுமையும் சிறையில் அடைத்து வைத்திருந்து, காலையில் 4 பேரை போலீசார் விடுதலை செய்தனர்.

மற்றும் 12 பேர்களைப் போலீசார் நேற்றிரவே விடுதலை செய்துவிட்டதாகக் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் இன்றிரவு வரை வீடு திரும்பவில்லை

போலீஸ் லாரியில் அவர்களை ஏதோ மறைவான இடத்துக்குக் கொண்டு சென்று, சிறைவைக்கப்பட்டிருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இந்த 12 தொண்டர்களுடைய பெற்றோர், அவர்களைத் தேடி அலைகின்றனர். அவர்கள் இருக்குமிடம் பற்றி தங்களுக்கு எதும் தெரியாதென்ற போலீசாரின் பதில், அவர்களை பீதிக்குள்ளாக்கியுள்ளது.

தொண்டர்களைத் தாங்கள் கைது செய்யவில்லை என்றும் அவர்கள்காப்பில் சிறிது நேரம் வைக்கப்பட்டு, காயங்களுக்கு சிகிச்சை செய்த பின்னர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் பிரெஞ்சிந்திய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறினார்.

பிரெஞ்சிந்திய போலீசாரின் செயலைக் கண்டு மக்கள் என்ன செய்வதென்று உணராது திகைக்கின்றனர்.

நெல் குத்தும் ஆலைக்கு எதிராக!

உரிமையளித்த திரு—கொச்சி சர்க்காரை எதிர்த்து மறியல்

திரு—கொச்சியில் உள்ள நெல் குத்தும் இயந்திரங்கள் இயங்கக் கூடாது என ஏற்கனவே இருந்த சர்க்கார் தடை விதித்திருந்தது. அதை புதிய ம. சோ. க சர்க்கார் விலக்கிவிட்டு பழையபடி இயங்க அனுமதித்து விட்டது. இதை எதிர்த்து சர்க்காருக்கு எதிராக ஒரு அரசியல் கட்சி கிளர்ச்சி செய்யக் கிளம்பி இருக்கிறது. அதற்காக வேண்டி, திருவனந்தபுரத்தில் உள்ள சர்க்கார் காரியாலயத்திற்கு முன்னால், மறியல் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இம் மறியல் போர் நடவடிக்கைக்கு, ஒரு செயற்குழுவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் கருத்துப்படி, முதல் மறியல் படை செங்கோட்டையைவிட்டு திருவனந்தபுரம் சென்றிருக்கிறது.

இக்குழுவின் போக்கை ஆதரிக்க செங்கோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில், நெல் குத்தும் இயந்திரங்களை அறவே ஒழித்துக் கட்டவேண்டுமெனவும் அவைகளை இயங்க மீண்டும் உரிமையளித்த சர்க்காரைக் கண்டித்தும், திரு—கொச்சி சட்டசபை உறுப்பினரான சட்டநாதக் கரையாளர் பேசினார்.

தோட்டத்தில் முக்கால் பங்கு கிணறு!

நாட்டு நலனுக்கென ஒதுக்கும் பணத்தில் பெரும் பகுதி நிர்வாகத்தில் செலவாகிறது

முன்னாள் மந்திரி குருபாதத்தின் குற்றச்சாட்டு

சேலம், ஜூலை 15—

"இந்தியாவின் மக்கள் தொகையில் 85 சதம் இன்று கிராமங்களில் வசிக்கின்றனர்; மக்கள் இன்னும் அதிகமாக நகரத்திற்கு வந்தாலும் 80 சதமக்களாவது இருந்தே தீருவர். தேசம் தொழில் மயமானாலும், ஒரு கோடி மக்களுக்குத்தான் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்கும்; மீதி 34 கோடி மக்கள் கிராமத்திலேதான் இருப்பர். இன்று வாக்காளர்களில் பெரும்பாலோர் கிராமங்களில்தான் உள்ளனர்; இருந்தாலும் பதவிக்கு வந்த உடனே, நம் பிரதிநிதிகள் கிராமங்களை மறந்துவிடுகின்றனர். நான் மந்திரி பதவியிலிருந்து வந்த 9 மாத காலம், கிராமத்தை விட்டு வந்த உணர்ச்சி, என்னை மிகவும் வாட்டியது. கிராமத்திலிருப்பவர்களுக்கு இன்னும் அரசியலைப் பற்றியோ, அணுகுண்டைப் பற்றியோ தெரியாது."

"இன்று, உலகத்தில் உள்ள 240 கோடி மக்களில் 180 கோடி மக்களுக்கு உணவு, உடை, வீடு வசதி கிடைக்காமல் கஷ்டப்படுகின்றனர். இந்திய கிராமவாசிகள் நிலையும் அதுதான் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு சர்க்கார் ஒதுக்கும் பணத்தில் 40 சதவிகிதம் உத்தியோகஸ்தர் சம்பளத்திற்கும், 15 சதவிகிதம் பிரயாணச் செலவிற்கும், 20 சதவிகிதம் அந்நிய நாட்டு சாமான்கள் வாங்கவும், கருவிகள் வாங்கவும் செலவாகின்றன மீதியுள்ள பணம்தான் கிராமத்தின் உண்மையான தேவைக்கு செலவழிக்கப்படுகிறது. கிராம அபிவிருத்திக்கு மத்திய சர்க்கார் 11 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது; அது போதாது. 30 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும். அதிகாரிகள் கிராம மக்களோடு ஒன்றாகக் கலந்து பழகினாலன்றி, திட்டங்கள் வெற்றி பெறாது. கிராம மக்கள் அதிகாரிகளை கப்புலது கிடையாது; அவர்களைக் கண்டு பயந்து வாழ்கின்றனர்."

—இவ்வாறு, சேலத்தில், மாவட்ட போர்டு போர்டு ஹாலில், திரு ஜே. ஆர். மேத்தாவின் தலைமையில் நடைபெற்ற சேலம் ரோட்டரி கிளப் கூட்டத்தில், முன்னாள் மந்திரி டாக்டர் குருபாதம் அவர்கள், கிராமவாசிகளின் பிரச்சினைகள் பற்றி பேசுகையில் கூறினார்.

மாகியில் அரசியல் நிலை மாறிவிட்டது!

பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அஸ்தமித்தது!

மக்களாட்சியின் மகத்தான வெற்றி

மேற்குக் கடற்கரைப் பகுதியில் கோழிக்கோட்டிற்கு அருகாமையில், மொத்தத்தில் 28 சதுர மைல் நிலப் பரப்புடைய மாகியில் இருந்து, பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சி அஸ்தமித்து விட்டது!

அதிகார மாற்றத்தை அங்கிருந்த பிரெஞ்சு நிர்வாக அதிகாரி, 12 உறுப்பினர்களைக் கொண்டதும் ஐ. கே. குமாரன் என்பவரைத் தலைவராகக் கொண்டதுமான மகாஜன சபையிடம் ஒப்படைத்துவிட்டு, கப்பலில் தனது பரிவாரங்கள் புடைசூழ புறப்பட்டுவிட்டார்.

இந்தியத் திட்டுகளிலுள்ள பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் வெளியேற்றம், துவங்கிவிட்டது! மக்கள் சக்தி வெற்றி பெற்றது!

மாகி, மலபார் கடற்கரை பகுதியில் உள்ளது, கோழிகோட்டிற்கு வடக்கில் 49 கல் தொலைவில் உள்ள கடற்கரை நகரமாகும். அதன் நிலப்பரப்பு 23 சதுர மைல். அங்கு மொத்தம் 15,000 மக்கள் உள்ளனர்.

துறைமுகப் பட்டினமான மாகியை பொட்டி, 9,000 மக்களைக் கொண்ட நான்கு கிராமங்கள் உள்ளன. அந்த நான்கு கிராமங்களும் சென்ற ஜூன் திங்களில் மகாஜன சபையைச் சேர்ந்த ஊழியர்களால் விடுவிக்கப்பட்டு, தற்காலிக விடுதலை சர்க்கார் நிர்வாகத்திலே இருந்து வருகிறது.

கத்தோலிக்க ஆலயத்திற்கு பிரிட்டிஷ் அரசியின் நன்கொடை

சரித்திரம் காணாத புதுமையான நிகழ்ச்சி!

பிரிட்டிஷ் அரசி எலிசபெத் சவுத்வார்க் என்னுமிடத்திலுள்ள கத்தோலிக்க சர்ச் ஒன்றிற்கு நன்கொடை அனுப்பியிருக்கிறார் என்று தெரிகிறது.

இச்சம்பவம் பிரிட்டிஷ் அரசர்களின் சரிதத்தில் ஒரு புதுமையாகும். பிரிட்டிஷ் மன்னர்கள் பிராட்டஸ்டண்ட் மதத்தினர்

எடின்பரோ கோமகனும் அரசி எலிசபெத்தின் தாயாரும் அந்த கத்தோலிக்க தேவாலயத்துக்கு அதன் புனர் அமைப்புக்காக நன்கொடை அனுப்பி உள்ளனர் என்று தெரிகிறது.

இந்த ஆலயம் போர்க்காலத்தில் குண்டுவீச்சால் சிதைந்து போயிற்று. பிரிட்டனில் அரச குடும்பத்தினர் யாரும், மன்னர்கள் உள்பட, பிரிட்டிஷ் சரித்திரத்தில் மறுமலர்ச்சிக்குப் பிறகு யாருமே இப்படி கத்தோலிக்க தேவாலயத்திற்கு நன்கொடை அளித்தது கிடையாது.

(பிரிட்டனில் மறுமலர்ச்சிக் காலத்தில் அந்த நாட்டின் கத்தோலிக்கர்கள் யாரும் மன்னராகக் கூடாது என்று சட்டமியற்றப்பட்டது)

இந்த நன்கொடைகளைப் பெற்றுக்கொண்ட சவுத்வார்க் தேவாலயத்தின் பிஷப் டாக்டர் சைரில் கவுராய் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனாராம்.

விலக்கு:

நிலச் சுங்க நிலையங்களிலிருந்தும், வெளித் துறைமுகங்களிலிருந்தும் அனுப்பப்படும் மதுபான மாதிரிகளுக்கு மதுவிலக்குச் சட்டத்தினின்றும் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஹைதராபாத்தில் 43 பேர் கொலை

மந்திரவாதிகள் என்ற சந்தேகத்தால் ஏற்பட்ட விளைவு

செகந்திராபாத், ஜூலை 14—சென்ற இரண்டு ஆண்டுகளில் ஹைதராபாத்தில் மந்திரவாதிகள் என்று சந்தேகிக்கப்பட்டு 43 பேர் கொலை செய்யப்பட்டார்கள் என்று தெரிகிறது.

ஹைதராபாத்தில் 1,00,000 மக்களுக்கு சராசரி கொலை வழக்குகள் 28 ஆக இருக்கிறதாம்.

இதுபோலவே, சென்னையில் 25, பம்பாயில் 31, மத்திய பிரதேசத்தில் 3·1 என்ற விகிதத்தில் கொலை வழக்குகள் காணப்படுகின்றனவாம்

இச்செய்தியை ஹைதராபாத் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சிவகுமார்லால் கூறினார்.

அனுமதி

அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் டாக்டர் ராம்மனோகர் லோகியாவின் ஹேபியஸ் கார்பஸ் மனு விசாரிக்கப்படும் போது அவர் நீதி மன்றத்தில் ஆஜராயிருக்க நீதி மன்றம் அனுமதி அளித்திருக்கிறது.

உதவி நிபுணர்கள் குழு ஒன்று செய்த சிபாரிசின் பேரில் இந்த ஆண்டில் கிழக்கு வங்கத்திற்கு 21 கோடி உதவி அளிக்கப்படும் என்று பாக். சர்க்கார் அறிவித்துள்ளது.

அச்சுறுத்தல்!

காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தான் உலக நீதி மன்றத்திற்குப் போகப் போவதாக இந்தியாவை அச்சுறுத்தியிருக்கிறது.

சந்திப்பு

டில்லியில் உள்ள பிரெஞ்சு தூதுவர் ஆஸ்டிரோராக் பண்டித நேருவைச் சந்தித்துப் பேசினார். சந்திப்பின் நோக்கம் வெளியிடப்படவில்லை இந்தோ-சீனப் பிரச்சினை பற்றி பிரெஞ்சுப் பிரதமரின் செய்தி ஒன்று நேருவிடம் கொடுக்கப்பட்டதாம்.

கல்லூரி

ஈரோடு மகாஜன கல்லூரியை ஜூலை 12-ம் தேதியன்று பெரியார் ஈ. வே. ராமசாமி திறந்து வைத்தார்.

உடல்நிலை

தற்போது ஐரோப்பாவில் சிகிச்சை பெறும் எச். என். சாஸ்திரியின் உடல்நிலை மோசமடைந்திருப்பதாக கராச்சி பத்திரிகை ஒன்றில் செய்திகள் வெளியாகியிருக்கிறது.

கழகச் செய்திகள்

பெங்களூர் - பிளாக்பள்ளி தி. மு. கழகம்

11—7—54 காலை 10 மணியளவில் தோழர் ஏ. டி. பிரான்சின் தலைமையில் கழக செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, 27—6—54ல் பொதுக் கூட்ட வரவு—செலவுகள் ஒப்புக்கொண்டதுடன், மும்முனைப் போராட்டத்தில் கலந்துகொண்டு உயிர் நீத்த தோழர்களுக்கு வீர வணக்கமும், ஏனைய வீரர்களுக்கு பாராட்டுதலும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சேரன்மாதேவி தி. மு. கழகம்

11—7—54 மாலை 5 மணிக்கு தோழர் எஸ். எம். காதர் தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது செயலாளர்: என். எஸ். பாண்டியன் ராஜிநாமா கடிதம் அங்கீகரிக்கப்பட்டதுடன்; வரவு—செலவு கணக்கும் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது பின்னர், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:—

செயலாளர்: சு. துரைராசன்; துணைச் செயலாளர்: கோ. சு. வேலப்பு; பொருளாளர்: சு. ரத்தினம்; மாவட்டப் பிரதிநிதி: பி. பாண்டியன்; விளம்பர உறுப்பினர்: இசக்கிபாண்டியன்.

பின்னர், கல்வித் திட்டத்தை ஒழித்த காமராசரைப் பாராட்டியும், கடந்த ஜூலை போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களின் குடும்பத்தினருக்கும், மற்றும் மறைந்த இயக்கப் பெரியோரின் குடும்பத்தினருக்கும் அனுதாபம் தெரிவித்தும், நெல்லை மாவட்ட தலைமை இனி நல்ல முறையில் செயலாற்ற மத்திய கழகம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

பெண்ணாடம் தி. மு. கழகம்

8—7—54ல் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: பி. எஸ். சுப்பிரமணியம்; துணைச் செயலாளர்: கே. அப்துல் சத்தார்; பொருளாளர்: மு. இராமசாசு; மாவட்டப் பிரதிநிதி: வீ. இராமசாமி; விளம்பர உறுப்பினர்: எம். அரங்கநாதன்; செயற்குழு உறுப்பினர்களாக கே. பெரியதம்பி, எஸ். கரீம், எஸ். சபியான், எஸ். கண்ணன், ரசாக், அப்துல்காதர்.

அமைச்சர் என். எஸ். ராமசாமியின் போக்கைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன், ஆகஸ்டு மாதத்திற்குள் ஆண்டு விழாவை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

திருகோணமலை தி. மு. க.

இலங்கை, ஜூலை 12—

2—7—54 இரவு 9 மணிக்கு அல்லஸ்ரோடு தோழர் சுப்பையா இல்லத்தில் தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஏ. எம். புரட்சியாளன் தலைமையில் நடைபெற்றது. கடந்த ஆண்டு கழக அறிக்கைகள் வாசிக்கப்பட்டபின், தோழர்கள் எஸ். செல்லப்பெருமாள் செயலாளராகவும், பி. மாதவராசன் துணைச் செயலாளராகவும், கே. பி. சபாபதி விளம்பர உறுப்பினராகவும்; வெ. திராவிடமணி பொருளாளராகவும், 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வடுகபட்டியில் தி. மு. க. பொதுக் கூட்டம்

சோழவந்தான் வட்டாரத்தைச் சேர்ந்த வடுகப்பட்டியில் (மதுரை மாவட்டம்) தி. மு. கழகப் பொதுக்கூட்டம் கருணாநிதி திடலில் 7—7—54 மாலை 5 மணிக்கு தோழர் எஸ். கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது தோழர் மு. வசனப்பித்தன் தற்கால அரசியல் நிலையைப் பற்றியும், தோழர் மதுரை எஸ். முத்து இலங்கை வாழ் தமிழரின் அவல நிலையைப் பற்றியும் பேசினர். இறுதியில் தோழர் சி. பி. சிற்றரசு தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டங்களைப் பற்றியும்; குடியாத்தம் தொகுதியில் தி. மு. கழகத்தின் கொள்கையைப் பற்றியும், வரும் ஜில்லா போர்டு தேர்தலில் புதிய வோட்டு முறை கையாளப்படுவதைக் கண்டித்தும், கழகக் கொள்கைகள் பற்றியும் விரிவுரையாற்றினார். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

திருமணங்கள்

வெங்கடேசபுரம் தோழர் எச். ஆசைத்தம்பி-தோழியர் பழனியம்மாள் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 வழங்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுடையது — பொறுப்பாளர்;

* * *

7—7—54ல், காவேரிபுரம் தோழர் ஐ. வி. இராமன் தலைமையில் நடைபெற்ற தோழர் பி. பாலன்—தோழியர் தனுக்கோடி இருவரின் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

7—7—54 இரவு 11 மணிக்கு தாத்தக்குடியை அடுத்துள்ள சுப்பிரமணியபுரத்தில், தோழர் வே. புகழ்மாலை—தோழியர் ஜெயமணியம்மாள் திருமணம் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்றது.

• • •

8—7—54ல், தோழர் ஆர். பழனியப்பனுக்கும்—கண்ணனூர் தோழியர்புஷ்பாவுக்கும் ஈரோடு கொல்லம்பாளையம் தெருவில் திருமணம் நடைபெற்றது

• • •

11-7-54ல், மதுரை கோரிப்பாளையம் தோழர் வி. இருட்டியன்—தோழியர் பூரணத்தம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் அ. சா. தனுக்கோட்டி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

பிறப்பு

அகமதாபாத் ஜமால்பூர் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் மு. அரங்கநாதன் துணைவியார் தோழியர் ஞானம்பாள் அம்மையாருக்கு ஒரு ஆண் மகவு பிறந்து தாயும் சேயும் நலம்—இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றியுடையது-பொறுப்பாளர்.

* * *

9—7—54ல், கவுந்தபாடி தோழர் இரா. துரை வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பங்கஜத்திற்கு பெண் மகவு பிறந்து தாயும் சேயும் நலம்.

• • •

தி. மு. கழகத் தோழர் ஏ. இருட்டினன் துணைவியார் செல்லத்தம்மாளுக்கு 27—6—54ல், பெண் மகவு பிறந்தது. குழந்தைக்கு நிலகா என பெயரிடப்பட்டது.

உலக அரங்கில்

சிகாகோ :
அதிக வெப்பம் காரணமாக அமெரிக்காவில் 111 பேர் மரணமடைந்தனராம். புயல் காற்று, சூறாவளி போன்றவைகளால் வீடுகள், கடைகள், சாலைகள், மரங்கள், தந்திக் கம்பிகள் இவைகளுக்கு ஏற்பட்ட சேதம் பல மில்லியன் டாலர்கள் இருக்குமாம்.

டுனிஸ் :
டுனிஷிய விடுதலைப் படையினரைத் துரத்திச் சென்ற ஒரு பிரெஞ்சு இராணுவ அதிகாரியையும், இரண்டு வெளிநாட்டிலாகா அதிகாரிகளையும் காணவில்லை என்று தெரிகிறது.

லண்டன் :
தொழிற்கட்சி மந்திரிசபையால் அமைக்கப்பட்ட 'முக்கியப் பொருள்கள் இலாகா'வை சர்ச்சில் முடிவு செய்திருக்கிறார். (ஜெர்மனிப் போரின்போது, பிரிட்டனில், தொழிற்கட்சி மந்திரி சபையால் அமைக்கப்பட்ட 'முக்கியப் பொருள்கள் இலாகா', அமைச்சர் காரியாலயத்தை மூடி விடுவதென்று சர்ச்சில் முடிவு செய்திருக்கிறார். இந்த இலாகாவிற்கு இப்போது வேலை அதிகமாக இல்லையாம்.)

* * *

பாகிஸ்தானுடன், அமெரிக்கா இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம், அமெரிக்கா ஆட்சியிலிருப்போர், அதன் எதிர்காலத்தை ஆபத்துக்குள்ளாக்கி விருக்கின்றனர் என்று சோவியத் இராணுவ பத்திரிகை ஒன்று எழுதியிருக்கிறது.

வியன்னா :
ஆஸ்திரியாவில் டான்யூப் ஆற்றில் வெள்ளம் குறைந்து விட்டதாம். ஆனால் இப்போது செக்கோஸ்லோவாகியா, யூகோஸ்லோவாகியா, ஹங்கேரி போன்ற நாடுகளில் வெள்ளம் அதிகமாகப் பெருகிறதாம்.

லிஸ்பன் :
பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எஸ். கே. பட்டீல், போர்ச்சுக்கல் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு வாசின் கருத்து புறப்பட்டுவிட்டார் என்று தெரிகிறது.

ரோம் :
ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தத்தை, இத்தாலிய சட்டசபையின் பாதுகாப்புக்குழு அங்கீகரித்திருக்கிறது

டோக்கியோ :
ஜப்பானிய சர்க்காரின் அழைப்பின் பேரில் இலங்கைப் பிரதமர் சர் ஜான் கொத்தலாவலை டிசம்பர் திங்களில் ஜப்பான் வருவார் என்று ஜப்பானிய வெளிநாட்டிலாகா அதிகாரி ஒருவர் கூறினார்

வாஷிங்டன் :
அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் பெடல்ஸ்மித் இந்தோ—சீன மாநாட்டில் கலந்து கொள்ள ஜினிவா புறப்பட்டார்.

நைரோபி :
கென்யாவில் 10 மாவ் மாவ் இயக்கக் கைதிகள் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார்கள் என்று தெரிகிறது. இப்புதுச் சிறையிலிருந்து மாவ் மாவ் கைதிகள் தப்பி ஓடுவது ஐந்தாவது தடவையாகும்.

கெய்ரோ :
சூயஸ் கால்வாய் பேச்சுகளில் பிரிட்டன் பல பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்துள்ளதாம் இச் செய்தியை கெய்ரோ பத்திரிகை 'அல் அஃராம்' தெரிவித்துள்ளது.

மாஸ்கோ :
இந்திய இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் சாகிப் சிங் சோக்கி, ண்டாலின் சமாதானப் பரிசை, மாஸ்கோவில் நடைபெற்ற விழா ஒன்றில் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு :
ஆசிய சமாதானத்திற்கு உழைத்தமைக்காக இலங்கைப் பிரதமர் கொத்தலாவலையைப் பாராட்டி, பிரெஞ்சு சர்க்கார், பிரான்சின் மிகப் பெரிய கௌரவப் பட்டமான 'கிரான்ட் கிராஸ் லெஜான் ஹானரி' என்ற பட்டத்தை அளித்திருக்கிறது. இதன் மூலம் கொத்தலாவலை பிரான்ஸ் சென்றால் அரசாங்க விருந்தாளியாக மதிக்கப்படுவார்.

வெனீஸ் :
சோவியத் யூனியன், உக்ரேன், வெள்ளை ருஷ்யா ஆகிய நாடுகள் ஐ. நா. சபையின், கல்வி, விஞ்ஞான, கலாசாரக் குழுவில் சேர்ந்துள்ளன. ருமேனியா உறுப்பினராகச் சேர மனுப் போட்டிருக்கிறது.

காஞ்சிபுரத்தில் :

தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புப் பொதுக்கூட்டம்

*

"செங்கற்பட்டு மாவட்டச் சார்பில் தூத்துக்குடி வழக்கு நிதிக்காக வசூலிக்கப்பட்டுள்ள தொகையை பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணாதுரை அவர்களிடம் நிதியளிக்கும் பொதுக்கூட்டம் 18—7—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு காஞ்சிபுரத்தில் தோழர் இராம. அரங்கண்ணல் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் தோழர்கள் அ. பொன்னம்பலனார், பொதுச்செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்களும் பேசுவார்கள். அன்பர்கள் யாவரும் வருக" என செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் அறிவிக்கின்றார்.

தோழர் கருணாநிதி

சார் விபத்திற்குள்ளானபோது ஏற்பட்ட உள் காயத்தால் தோழர் கருணாநிதியின் மூக்கின் உள் பகுதியில் சீழ் கோர்த்துக் கொண்டிருந்தது. அது இன்று எடுக்கப்பட்டு உள்ளது. அதில், முழு குணமேற்பட ஒரு வாரம் பிடிக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

கே. கே. நீலமேகம்

தஞ்சை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் கே. கே. நீலமேகம் தன் சொந்த வியாபார விஷயமாக ஒரு மாத காலம் குண்டூர் சென்றிருந்தவர் இன்று சென்னை வந்து சேர்ந்தார். தலைமை நிலையப் பொறுப்பாளரை சந்தித்துவிட்டு இன்றிரவு கும்பகோணம் செல்வார்.

செயற்குழுக் கூட்டம்

சென்னை மயிலாப்பூர் 44-வது வட்டம் தி. மு. கழக அவசர செயற்குழு கூட்டம் 12—7—54 திங்கள் இரவு 10-30 மணிக்கு நடைபெற்றது.

அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது:

"30—11—52 பேச்சாளர் கூட்டத்தில் போடப்பட்ட தீர்மானத்திற்கு வருத்தவுடன்: அத்தீர்மானத்தை வாபஸ்பெற்று விட்டதென்று இக்கமிட்டி முடிவு செய்கிறது," என செயலாளர் பி. எம். மதியழகன் அறிவிக்கின்றார்.

கோவாவில் சத்தியாக்கிரகம்

பம்பாய், ஜூலை 15—
ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியான இந்திய சுதந்திர தினத்தன்று இந்தியர்களுள்ள கோவா மக்கள் அடங்கிய முதல் தொண்டர் படை கோவாவிற்குள் பிரவேசிக்கும் என கோவா சுதந்திர இயக்க செயற்குழு அறிவித்திருக்கிறதாம்.

கோவாவிற்குள் பிரவேசிக்கும் முதல் தொண்டர் படை, பம்பாயிலும், மகாராஷ்டிரத்திலும் அமைக்கப்பட்டு வருகிறதாம். தொண்டர்கள் கோவாவில் பிரவேசிப்பதற்கு முன்பு அவர்கள் கோவா எல்லைக்குக் கொண்டு போகப்படுவார்களாம்.

தொண்டர்கள் அந்த மக்களுடன் சேர்ந்து சத்தியாக்கிரகம் செய்வார்கள் என்று செயற்குழு பிரதிநிதி கூறினாராம்.

கிரந்தர் கூறுகிறார்!

ஐரோப்பாவில் நேசநாட்டுப் படையின் தலைவரான ஜெனரல் கிரந்தர், மேற்கத்திய நாடுகளைப் பலப்படுத்தி இராணுவப் பலத்தை அதிகரிக்க வேண்டுமென்றும், தற்போதைய மேற்கத்திய பாதுகாப்பு அமைப்புகள் சோவியத்தின் ஒரு திடீர் தாக்குதலைச் சமாளிக்க இயலாது என்றும் கூறினார்.

தூத்துக்குடி நகர தி. மு. கழக தோழர்கட்கு

"நமது நகரில் தி. மு. கழகத்திற்கு பொறுப்பாளர்கள் என்ற பெயரால் சிலர் பொறுப்பற்ற முறையில் எனதுடைய சம்மதமில்லாமலும், மற்றும் நிர்வாகஸ்தர்களின் சம்மதமில்லாமலும், கழகத்தின் பெயர் சொல்லி கட்டடம், நிதி வசூலிப்பது போன்ற பல காரியங்களை செய்வதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட செய்கைகள் கழகத்திற்கு இழுக்கை உண்டாக்குவதாக இருக்கிறது.

ஆகையால், கழகத் தோழர்கள் அவைகளுக்கு ஆதரவு கொடுக்காமல் இருப்பதோடு, நான் நகருக்குள் வரும் வரை, நகர தி. மு. கழகத் துணைச் செயலாளர் செய்யும் கழக வேலைகளுக்கு ஆதரவு கொடுக்கும்படி வேண்டுகிறேன்," என செயலாளர் எஸ். நடராசன் அறிவிக்கிறார்.

நெல்லை மாவட்ட தி.மு.க. மாவட்ட பிரதிநிதிகட்கு

நெல்லை மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டு ஆலோசனைக் கூட்டமும், மாநாட்டு தலைவர்கள், திறப்பாளர்கள் தேர்ந்தெடுப்பதும், மற்றும் மாநாட்டு நடவடிக்கைகள் கலந்து பேச வேண்டியிருப்பதால், இதையே அழைப்பாகக் கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் 21—7—54 புதன்கிழமை காலை 10 மணிக்கு, நெல்லை சந்திப்பு இந்துக் கல்லூரிக்கு எதிரேயுள்ள வள்ளுவர் கழகத்தில் கலந்துகொள்ளும்படி வேண்டுகிறேன் என செயலாளர் எஸ். நடராசன் கேட்டுக்கொள்கிறார்.

மும்முனைப் போராட்ட முழக்க நாள்

18—7—54 காலை 9 மணிக்கு குடிசை தி. மு. கழக மனையில் தோழர் கணேசன் தலைமையில் கொண்டாடப்படும். கூட்ட முடிவில் இரா. நாராயணசாமி இன்னிசை வழங்குவார்.

மாணவர் இலக்கியமன்றம் துவக்க விழா

19—7—54 மாலை 3 மணிக்கு பெண்ணாடம், கழக உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் துவக்கவிழா தோழர் ஏ. தேவசேயப்பாவானர் தலைமையில் நடைபெறும்.

தொடக்க விழா

19—7—54 மாலை 3½ மணிக்கு வடசென்னையில், சென்னை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் தொடக்க விழா தோழர் கே. வி. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன் அவர்கள் 'சங்க இலக்கியம்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.

செய்திக்கதிர்

தொண்டர்கள்
பிரெஞ்சிந்திய விடுதலை இயக்கத்திற்கு, ஒரு தொண்டர் படையை அனுப்புவதென்று, காங்கிரஸைச் சேர்ந்த பேருமுன்னணி இளைஞர்கள் குழு முடிவு செய்திருக்கிறது.

அவசரச் சட்டம்
சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பு ஒன்றினை ஒட்டி, வருமான வரிக் கமிஷனால் கண்டுபிடிக்கப்பட்ட 'வரி ஏமாற்று' வழக்குகளைப் புதிதாகப் பரிசீலனை செய்ய இந்திய சர்க்கார் அவசரச் சட்டம் ஒன்று இயற்றும் என்று தெரிகிறது.

கட்டுப்பாடு
துணி மீதுள்ள எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கிவிட இந்திய சர்க்கார் ஆலோசிக்கிறதாம் இது சம்பந்தமாகத் துணி ஆலைகளின் கருத்து கோரப்பட்டுள்ளதாம்.

இடமாற்றம்
சென்னையில் உள்ள ஆந்திர சர்க்கார் காரியாலயங்களை குண்டூர் அல்லது மற்ற ஆந்திர நகரங்களுக்கு சீக்கிரமே மாற்ற விரும்புவதாக ஆந்திர முதல் அமைச்சர் பிரகாசம் கூறினார்.

வெள்ளம்
பூனாவில் வெள்ளத்தினால் 5000 பேர் வீடிழந்தனர் என்று தெரிகிறது. மூதா, முல்லா ஆறுகளில் ஏராளமாக வெள்ளம் வருகிறதாம்.

தண்ணீர்ப் பஞ்சம்
ஹூப்ளியில் பெரும் அளவில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாம். 20 காலன் கொண்ட ஒரு பாரல் தண்ணீர் 10 அணாவுக்கு விற்பனை செய்யப்படுகிறதாம்.

சந்திப்பு
திருத்தணி எல்லைப் பிரச்சினையும் இரு சர்க்கார் கூடிப் பேசும் அளவில் வரவில்லை என்று ஆந்திர முதல் அமைச்சர் பிரகாசம் கூறினார். இரு ராஜ்யங்களின் முதல் அமைச்சர்களும் கூடிப் பேசும் பிரச்சினை இப்போது இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

பொருளாதாரம் :
பொருளாதார சீர்திருத்தங்களை அளிக்கப்படுத்து வதற்கு பொருட்டு அரசியல் சட்டத்தின் 31-வது விதியைத் திருத்தப் பெரும்பாலான ராஜ்யங்கள் விரும்புகின்றன என்று, காங்கிரஸ் பொதுக் காரியதரிசி அகர்வால் கூறினார்.

நீலகிரியில் இரும்பு, மைகா கிடைக்கிறது

சென்னை, ஜூலை 15—
மலபார், நீலகிரி பகுதிகளில் ஏராளமாக இரும்பு கிடைக்குமென்று தெரிகிறது. இந்திய சர்க்கார் கனிப் பொருள் இலாகாவைச் சேர்ந்த ஏ. நாகேசராவ் நடத்திய ஆராய்ச்சியில் இந்த உண்மை தெரியவந்தது.

இரும்பு தவிர மைகாவும் அப்பகுதிகளில் கிடைக்குமென்று தெரிகிறது.

மலபாரில் உள்ள வயனாடு தாலுகா, நீலகிரியில் கூடலூர் தாலுகா இவைகளில் இக்கனிப் பொருள்கள் அதிகமாக கிடைக்குமென்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. இளஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அமுதம் அச்சகத்தில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது (கீழ், குசவர் சாவடித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : இரா. நெ. அன்பழகன், பி. ஏ.

மதுவிலக்கிற்கு பம்பாய் மக்களாதரவு கிடையாதாம்!

வரிக் கெடுக்கப்பட்டால் திட்டம் தோல்வியடையுமாம்!

மந்திரியிடம் காங்கிரஸ் முக்கியஸ்தர் முறையீடு!

பூனா, ஜூலை 12—
பம்பாய் சர்க்கார் மதுவிலக்கு கொள்கையை புனராலோசனை செய்யவேண்டுமென்றும், மதுவிலக்குப் பிரச்சினையில் பம்பாய் மாநிலத்தில் வாக்கெடுப்பு நடத்தினால் சர்க்கார் தோல்வியுறும் என்றும், பம்பாய் காங்கிரஸ் தோழர்கள் பம்பாய் மதுவிலக்கு உதவி அமைச்சரிடம் கூறியிருக்கின்றனர்.

காங்கிரஸ் மாளிகையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உதவி அமைச்சர் டாக்டர் நாயகேவிடம் இக்கருத்துக்கள் சொல்லப்பட்டன என்று தெரிகிறது.

அமைச்சர் தனது பதிலில், காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்கில் நம்பிக்கை இழந்துவிட்டனர் என்றும், மூப்பு அவர்களிடம் குடியின் கொடுமையை ஒழிக்க வேண்டுமென்ற வாஞ்சையுடைய உணர்ச்சி, இப்போது காணப்படவில்லை என்றும் கூறினாராம்.

இந்த விவாதத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் தோழர் ஒருவர், சட்டத்தின் மூலம் எப்படி மதுவின் கொடுமையை ஒழிக்க முடியுமென்று ஆச்சரியப்பட்டாராம். தவிர, வேண்டுமானால் இவ்வகை முறையே குடிப்பழக்கத்தை ஒழிக்க இயலும் என்று அவர் மேலும் கூறினார் என்று தெரிகிறது.

இன்னொருவர், மதுவிலக்கு சட்டமியற்றுவதைவிட, சர்க்கார் சிறிது சிறிதாக குடியை ஒழித்திருக்க வேண்டுமென்று கூறினார்.

காங்கிரஸ் தோழர்களின் இக்கருத்துக்களுக்கு விடையளிக்கையில் அமைச்சர் நாயகே, சட்டத்தால் மட்டுமே மதுவின் கொடுமையைப் போக்க முடியுமென்று சர்க்கார் நம்பவில்லை என்று கூறி, காங்கிரஸ் தோழர்களை மதுவிலக்கின் வெற்றிக்காக ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டாராம்.